தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவாரூர்

C.C. No. 12 / 2025

PW : 17

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. அன்புச்செல்வி | த / பெ. | | திரு. |
| கிராமம் | : | | தாலுக்கா | : | |
| ஜாதி | : | | தொழில் | : | |
| மதம் | : | | வயது | : | |

2025 ஆம் ஆண்டு மே மாதத்தின் 20 ம் தேதி ...................... பிரிவு 4 ஆணையுறுதி சட்டம் 1969 ன் படி திரு. V. சுந்தரராஜ்,M.L., அவர்கள் முன்பாக ஆணையிட்டு உறுதி கூறப்பட்டது.

20.05.2025

முதல் விசாரணை

நான் தற்போது வலங்கைமான் கூட்டுறவு சிக்கன மற்றும் கடன் சங்கத்தில் செயலாளராக பணியாற்றி வருகிறேன். 2019 ம் ஆண்டு இதே சங்கத்தில் எழுத்தராக பணிபுரிந்தேன். ஆஜர் எதிரியை தெரியும். அவர் 2019 ஆம் ஆண்டு மேற்கூறிய சங்கத்தில் செயலாளராக பொறுப்பில் இருந்தார். இந்த வழக்கின் விவரம் எனக்கு தெரியும். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள். என் பணி குறித்து போலிசார் விசாரித்தார்கள். துணை தின பதிவேடு மற்றும் சிக்கன சேமிப்பு பதிவேடு, தலைவர் மற்றும் செயலாளர் அலுவலக ரீதியாக சொல்லும் பணிகளை செய்து வந்தேன். 11.07.2019 ல் எனக்கு

சங்கத்தில் செயலாளர் பொறுப்பினை கொடுத்தார்கள். தீர்மானத்தின் அடிப்படையில் வேலையில் இருந்தேன். ஆஜர் எதிரி கவிதா அப்போது செயலாளர் பொறுப்பில் இருந்தார். அவரிடம் கடன்தாரர் உறுப்பினர்கள் நேரடியாகவோ வங்கி மூலமாகவோ கடன் செலுத்திய விவரம் எனக்கு தெரியுமா என்று கேட்டார்கள் அது பற்றிய விவரம் எனக்கு தெரியாது என்று கூறினேன். நான் செயலாளராக இருந்தபோது இதுபற்றி எனக்கு தெரியவில்லை. பிறகு ஆஜர் எதிரி வரவு செலவு கணக்கு வைக்காமல் பணம் பெற்ற விவரம் தெரிந்துகொண்டேன்.

குறுக்குவிசாரணை

திருவாரூர் வணிக குற்றப்பிரிவு போலிசார் என்னை விசாரித்த தேதி மாதம் வருடம் ஞாபகம் இல்லை. போலிசார் என்னை விசாரிக்கவில்லை என்றும் அதனால்தான் போலிசார் விசாரித்த தேதி மாதம் வருடம் ஞாபகம் இல்லை என சொல்கிறேன் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரி கணக்கில் வரவு வைக்காமல் பணம் பெற்ற விவரம் தெரிந்துகொண்டேன் என்ற விவரத்தை போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன், அவ்வாறு சொல்லவில்லை என்றால் சரியல்ல. 11.07.2019 லிருந்து பொறுப்பு செயலாளராக கூட்டுறவு மற்றும் சிக்கன கடன் சங்கத்தில் இருந்தேன். இந்த சங்கத்தில் பராமரிக்கப்படும் பதிவேடுகள் மொத்தம் எத்தனை உள்ளது என்றால் சுமார் 15 பதிவேடுகள்

பராமரிக்கப்படுகிறது. எங்கள் அலுவலகத்திற்கு 30 பதிவேடுகள் ஒதுக்கப்பட்டுள்ளது என்றும் 30 பதிவேடுகள் அலுவலகத்தில் பராமரிக்கப்பட்டு வருகிறது என்றும் நான் வழக்கிற்காக 15 பதிவேடுகள் பராமரிக்கப்படுவதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. மேற்குறிப்பிட்ட சங்கத்திற்கு நான் பதவி ஏற்ற காலத்திலிருந்து நான் ஒருவர் மட்டுமே பணியில் உள்ளேன். 09.02.2000 ம் ஆண்டிலிருந்து வலங்கைமான் பஞ்சாயத்து யூனியன் அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்கள் கூட்டுறவு சிக்கன சங்கத்தில் எழுத்தராக பணியில் சேர்ந்தேன். எங்கள் சங்கத்தில் ஆசிரியர்களை தவிர பஞ்சாயத்து யூனியன் அலுவலர்களும் உறுப்பினர்களாக உள்ளனர். தற்போது 181 உறுப்பினர்கள் உள்ளனர். மேற்குறிப்பிட்ட சங்க அலுவலகத்தில் நானும் ஆஜர் எதிரியும் ஒன்றாக பணிபுரிந்து வந்தோம். எங்கள் சங்க பதிவேடுகளில் துணை தின குறிப்பேடு, சிக்கன சேமிப்பு பதிவேடுகளை மட்டும் நான் பராமரிப்பேன் மற்ற ரொக்க வரவுசெலவு பதிவேடு உட்பட மற்ற பதிவேடுகளை ஆஜர் எதிரி பராமரித்து வந்தார். மற்ற பதிவேடுகளில் எனது கையெழுத்து உள்ளது என்றால் ரொக்க சம்பந்தப்பட்ட பதிவேடுகளில் எனது கையெழுத்து இருப்பதற்கு வாய்ப்பு இல்லை. மேற்கண்ட இரண்டு பதிவேடுகளை மட்டும் பராமரிக்கவேண்டும் என்று சங்கத்தில் தீர்மானம் எதுவும் போடவில்லை. அவ்வாறு தீர்மானம் எதுவும் போடாத நிலையில் நான் எழுத்தர் என்ற முறையில் சங்கத்தின்

அனைத்து பதிவேடுகளையும் பராமரிக்க கடமைபட்டவர் என்றால் சரிதான். ஆஜர் எதிரி விடுப்பில் இருந்த காலத்தில் சங்கத்தின் பதிவேடுகளை நான் பராமரிக்க கடமைபட்டவர் என்றால் சரிதான். நானும் ஆஜர் எதிரியும் ஒன்றாக பணிபுரிந்த காலத்தில் சங்கத்தில் எந்த ஒரு தவறான நடவடிக்கையும் நடைபெறவில்லை நான் குழந்தைபேறு விடுப்பில் இருந்தபோது தவறான நடவடிக்கை நடந்திருக்கலாம் அதுபற்றி எனக்கு தெரியாது. நான் குழந்தைபேறு காலவிடுப்பில் இருந்த காலங்களை 81 விசாரணை அதிகாரியிடமோ வணிக குற்றப்பிரிவு போலிசாரிடமோ சொல்லவில்லை என்றால் சரிதான். எங்களுடைய அலுவலகம் திருவாரூர் மாவட்ட கூட்டுறவு பதிவாளர் அலுவல தலைமையின்கீழ்தான் இயங்கிவருகிறது என்றால் சரிதான். அந்த கூட்டுறவு பதிவாளர் அலுவலகத்தில் எனது உறவினர் முத்துரங்கன் என்பவர் பணியில் இருந்தார் அவர் ஐந்தாறு வருடங்களுக்கு முன்பாக பணி ஓய்வு பெற்றுவிட்டார். அவரது சிபாரிசின் அடிப்படையில்தான் நான் பணியில் சேர்க்கப்பட்டேன் என்றால் சரியல்ல. என்னுடைய பணிபதிவேட்டை இந்த வழக்கு தொடர்பாக வரவழைத்து பார்ப்பதற்கு எனக்கு எந்தவித ஆட்சேபணையும் இல்லை. நான் கூட்டுறவு சங்க எழுத்தர் வேலையை ராஜினாமா செய்துவிட்டு சென்றுவிட்டேன் என்றும் பிறகு அரசினுடைய 480 நாட்கள் பணிபுரிந்தால் பணிநிரந்தரம் செய்யப்படுவார்கள்

என்ற அடிப்படையில் நான் மீண்டும் பணியில் சேர்ந்தேன் என்றும் இடைபட்ட காலங்கள் திரு.முத்துரெங்கன் என்பவருடைய சிபாரிசினை பயன்படுத்தி விடுப்பு காலமாக மாற்றப்பட்டது என்றும் சொன்னால் சரியல்ல. நான் 2000 ஆம் ஆண்டு பணியில் சேர்ந்து வேலைபார்த்து வந்தேன் என்றும் என்னை செயலாளராக பணி உயர்த்தவேண்டும் என்ற காரணத்தினால் செயலாளராக இருந்த ஆஜர் எதிரி மீது பொய்யான குற்றங்களை சுமத்தி அவரை பணியிலிருந்து நீக்கிவிட்டு என்னை செயலாளராக திரு. முத்துரெங்கனின் செல்வாக்கின் அடிப்படையில் நியமிக்கப்பட்டேன் என்றும் சொன்னால் சரியல்ல. இந்த விவரங்களை நான் போலிசார் விசாரணையில் தெரிவிக்கவில்லை என்றால் சரியல்ல.

V SUNDARARAJ

Digitally signed by V SUNDARARAJ
Date: 2025.05.20 13:34:53 +0530

தலைமை நீதித்துறை நடுவர்,

திருவாரூர்.